# பரீட்சகர் அறிக்கை

## AA3 பரீட்சை - 2017 யூலை

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்
## FINANCIAL ACCOUNTING AND REPORTING

---

பரீட்சார்த்திகள் விட்ட பொதுவான தவறுகள் ஒவ்வொரு வினாவின் கீழும் தரப்பட்டுள்ளன. சித்திபெறத் தவறிய பரீட்சார்த்திகள் எதிர்காலப் பரீட்சைகளில் இவற்றை திருத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்:

### பகுதி A

### வினா இல. 01

பகுதி (a) யில் நிதிக்கூற்றுக்களிலுள்ள தகவல்களின் பயன்பாட்டினை அதிகரிக்கின்ற தரரீதிக் குணாம்சங்கள் பற்றி பரீட்சிக்கப்பட்டது.

கிட்டத்தட்ட எல்லா பரீட்சார்த்திகளும் இரண்டு தரரீக் குணாம்சங்களை சரியாக குறிப்பிட்டனர். சிலர் வினாவில் கேட்கப்படாத அந்த குணாம்சங்களை விபரித்து எழுதி தமது நேரத்தை வீணடித்தனர்.

பரீட்சார்த்திகள் வினாவினை நன்கு வாசித்து கேட்கப்பட்டவற்றிற்கு மாத்திரம் விடையெழுதுதல் வேண்டும். தேவையற்ற விபரங்களை எழுதுதல் மேலதிக புள்ளிகளை தராத போதிலும், வேறு வினாக்களுக்கு பயன்படுத்தவேண்டிய காலத்தை வீணடிப்பதாகும்.

பகுதி (b) யில் நிதியறிக்கையிடலுக்கான வேலைச் சட்டகத்திற்கு அமைய வருமானத்தின் ஏற்பிசைவுத் தேர்வு நிபந்தனைபற்றி வினவப்பட்டது.

கணிசமான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்த அதேவேளை சிலர் ஒரு தேர்வுநிபந்தனையைக்கூட சரியாக எழுதியிருக்கவில்லை.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:** கோட்பாட்டு வேலைச்சட்டகம் பற்றிய அறிவு.

### வினா இல. 02

பகுதி (a) யில் இலங்கையில் கம்பனிகளுடன் தொடர்புபட்ட 03 சட்டவாக்கங்கள் / சட்டங்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

மிகவும் இலகுவான இந்த வினாவுக்கு அனேக பரிட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெற்றனர். சிலர் ஒரு புள்ளிளைக்கூட பெற்றிருக்கவில்லை.

பகுதி (b) யில் இலங்கையில் காப்பாவண மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவிவை நிறுவிய நோக்கங்கள் இரண்டினை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் மாத்திரம் முழுப்புள்ளிகளை பெற்றிருந்தனர். ஏனையோர் சரியாக விடையளிக்கவில்லை. விடைகளிலிருந்து அனேகர் இலங்கையில் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் பற்றிய அறிவினை கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:** ஒழுங்குபடுத்தல் வேவைச்சட்டகம் பற்றிய அறிவு.

## வினா இல. 03

பகுதி (a) யில் LKAS 23 – *கடன்படுகைக் கிரயம்* எனும் நியமத்திற்கு அமைய தகைமைபெறும் சொத்து (Qualifying Asset) எனும் பதத்தை பொருள்வரையறை செய்யுமாறு கேட்கப்பட்டது..

அனேக பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு மிக மோசமாக விடையளித்திருந்தனர். ஓரிரு பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியாக விடை எழுதினர். பரீட்சார்த்திகளின் கணக்கீட்டு நியமங்கள் பற்றிய அறிவு போதுமானதாக இல்லை.

பகுதி (b) யில் LKAS 18- *வருமானம்* நியமத்திற்கு அமைய பொருட்கள் விற்பனையிலிருந்தான வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்கு நிறைவுசெய்யப்பட வேண்டிய 03 நிபந்தனைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

மிகவும் குறைவான பரீட்சார்த்திகளே முழுப்புள்ளிகளைப் பெற்றனர். ஏனையோரின் விடைகள் மிகவும் மோசமாக இருந்தது. இதற்குக் காரணம் கணக்கீட்டு நியமங்கள் பற்றிய கோட்பாட்டு அறிவு இல்லாமையாகும்.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:** கணக்கீட்டு நியமங்கள் பற்றிய கோட்பாட்டு அறிவு.

## வினா இல. 04

பகுதி (a) யில் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்வுகளுக்கு 03 உதாரணங்கள் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

மிகவும் இலகுவான இந்த வினாவிற்கு காசுப்பாய்வு தொடர்பில் அடிப்படை அறிவுடன் மாத்திரம் விடையளிக்க முடியும். அனேக பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு முழுமையான புள்ளிகளை பெற்றனர்.

பகுதி (b) இல் காசுப்பாய்வுக் கூற்றில் உள்ளடக்கப்படாத 02 காசுசாராத ஊடுசெயல்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

அனேகமானோர் இந்தப் பகுதிக்கு சரியாக விடையளித்திருந்தனர்.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:** நியமங்கள் பற்றிய கோட்பாட்டு மற்றும் பிரயோக அறிவு.

# <u>பகுதி B</u>

## வினா இல. 05

### பகுதி (a)

LKAS 10- அறிக்கையிடற் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள் எனும் நியமத்திற்கு அமைவாக கணக்கியற் காலத்திற்குப் பிந்திய தரப்பட்ட இரு நிகழ்வுகளின் கணக்கீடு மற்றும் அதற்கான காரணங்கள் பற்றி வினவப்பட்டது.

பல பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு விடையளித்தனர். அனால் பலர் அவை செம்மையாக்க நிகழ்வா இல்லையா எனக் குறிப்பிட தவறியிருந்தனர். அனேகமானோர் வினாவில் தரப்பட்ட தரவுகளை திருப்பி எழுதி அவை ஐந்தொகைத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள் என எழுதினர்.

ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியான விடை எழுதியிருந்தனர். அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு:

- செம்மையாக்க நிகழ்வு அல்லது செம்மையாக்கமற்ற நிகழ்வாக இனங்கண்டமைக்கு காரணங்களை சிலர் தந்திருக்கவில்லை.
- செம்மையாக்க நிகழ்வு அல்லது செம்மையாக்கமற்ற நிகழ்வாக இனங்கண்டமைக்கு சிலர் தவறான காரணங்களை எழுதியிருந்தனர்.

பகுதி (b) யில் நிதிக் குத்தகைபற்றி தரப்பட்ட ஊடுசெயலொன்று தொடர்பாக குத்தகைக்கு தருனனின் நிதிக்கூற்றுக்களின் பிரித்தெடுப்புக்களை தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

இந்தப் பகுதிக்கு ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியாக விடையெழுதினர். அனேகமான பரீட்சார்த்திகள் விட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு:

- சில பரீட்சார்த்திகள் குத்தகைக்கு தருனனின் ஏடுகளுக்குப் பதிலாக குத்தகைக்குப் பெறுனனின் ஏடுகளில் ஊடுசெயல்களை காட்டியிருந்தனர்.
- குத்தகைக்குத் தருனனின் வருமானத்திற்குப் பதிலாக குத்தகைக்குப் பெறுனனின் செலவாக காட்டினம்.
- குத்தகைக்குத் தருனனின் நடைமுறை/ நடைமுறையல்லாச் சொத்துகளுக்கு பதிலாக குத்தகைக்குப் பெறுனனின் நடைமுறை/ நடைமுறையல்லாப் பரிப்புகளாக காட்டினர்.
- குத்தகைப் பெறுமதியாக ரூபா 2.4 மில்லியனை கணக்கிற் கொண்டிருந்தனர்.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:** கணக்கீட்டு நியமங்களின் பிரயோகம்.

## வினா இல. 06

இந்த வினாவில் நேரில் முறையில் காசுப்பாய்வுக் கூற்றினை தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

இந்த வினாவுக்கான பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்ததுடன், அனேகமானோர் 7 க்கும் அதிகமான புள்ளிகள் பெற்றனர். சில பரீட்சார்த்திகள் முதலீட்டு மற்றும் நிதியளிப்புச் செயற் பாடுகளை வெவ்வேறாக இனங்காணத் தவறியிருந்தனர். அனேகமானோர் விட்ட பொதுவான தவறுகள் வருமாறு:

- காசுசாராத உருப்படிகளின் தவறான செம்மையாக்கம். உதா: தேய்மானத்தினை நிகர இலாபத்துடன் கூட்டுவதற்குப் பதிலாக கழித்தமை.
- வரிக்கு முந்திய நிகர இலாபத்திற்குப் பதிலாக வரிக்குப் பிந்திய இலாபத்தினை எடுத்திருந்தமை.
- செயற்படு மூலதன மாற்றங்கள் தவறாக செம்மையாக்கம் செய்யப்பட்டமை. உதா: தொக்கில் அதிகரிப்பினை கழிப்பதற்குப் பதிலாக கூட்டியிருந்தமை.
- செலுத்திய வரி மற்றும் பணிக்கொடை கணக்கிற் கொள்ளப்படாமை.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:** LKAS 07- காசுப்பாய்வுக் கூற்று நியமத்தின் பிரயோகம்.

## வினா இல. 07

இந்த வினாவில் கணித்துத் தரப்பட்ட விகிதங்களை பயன்படுத்தி, கம்பனியின் இலாபத்திறன், திரவநிலை மற்றும் செயற்படு மூலதன முகாமையின் வினைத் திறன் பற்றி முகாமைப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க அறிக்கையொன்று தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியான அமைப்பையும் சரியான உள்ளடக்கத்தையும் கொண்ட சரியான அறிக்கையை தயாரித்திருந்தனர். பல பரீட்சார்த்திகளுக்கு அறிக்கையிடல் பற்றிய திறமையில்லை.

பல பரீட்சார்த்திகள் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் விகிதம் அதிகரித்தது அல்லது வீழ்ச்சியடைந்தது என மாத்திரம் எழுதியிருந்தனர். அவர்கள் விகித மாற்றத்திற்கு சாத்தியமான காரணங்களை எழுதவில்லை. குறிப்பாக, அந்த மாற்றங்கள் செயற்படு மூலதன சுழற்சியில் கொண்டுள்ள தாக்கத்தை அனேகர் எழுதியிருக்கவில்லை.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு திருப்திகரமாக இருக்கவில்லை.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:** விகிதங்களின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ளுதலும், அறிக்கை எழுதுதற் திறமையும்.

## பகுதி C

## வினா இல. 08.

இந்த வினாவில் பிரசுரிப்புத் தேவைக்காக கம்பனி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அறிவு பரீட்சிக்கப்பட்டது.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு:

- அனேகமானோர் ஆதனம்ஈ பொறி மற்றும் உபகரணத்திற்கான ஆரம்ப மீதிக்கான செம்மையாக்கங்களை செய்யவில்லை.
- சிலர் தேய்மானங்களை சரியாக கணிக்கவில்லை. தேய்மானத்தை கணிக்கும்போது, கொள்வனவுத் திகதிகள் கருத்திற் கொள்ளப்படவில்லை.
- மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபத்தினை சிலர் சரியாக கணிக்கவில்லை.
- சிலர் முன்மொழியப்பட்ட பங்கிலாபத்தை குறிப்பாக வெளிக்காட்டுவதற்குப் பதிலாக உரிமையாண்மை மாற்றக்கூற்றில் செம்மையாக்கம் செய்திருந்தனர்.
- சிலர் இறுதித்தொக்கு பெறுமதி வீழ்ச்சி ரூபா 50,000/- இனை விற்பனைக் கிரயத்தில் செம்மையாக்கம் செய்வதற்குப் பதிலாக வேறு செலவாகக் காட்டியிருந்தனர்.
- ஒருசில பரீட்சார்த்திகள் நீதிமன்றத் தீர்ப்பினை செம்மையாக்க நிகழ்வாகக் கொள்ளாது, குறிப்புக்களில் காட்டியிருந்தனர்.
- ஆண்டிற்கான வருமான வரிச் செலவு மற்றும் 31.03.2017 இல் செலுத்தவேண்டிய வருமான வரியினை சிலர் சரியாக கணித்திருக்கவில்லை.
- பலர் வங்கிக் கடனின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாக் கூறுகளை சரியாக கணிக்கவில்லை.

- பலர் முன்னர் அறவிடமுடியாக் கடனாக பதிவழித்த கடனின் பெறுவனவை ஏனைய வருமானமாகக் காட்டாது கடன்பட்டோர் தொகையிலிருந்து கழித்துக் காட்டியுள்ளனர்.
- சிலர் செலுத்திய பங்கிலாபத்தினை கைக்கொள் இலாபத்திற்குப் பதிலாக பங்கு மூலதனத்திலிருந்து கழித்துள்ளனர்.
- சிலர் தமது செயன்முறைகளை (workings) காட்டவில்லை.

ஒட்டுமொத்தமாக பார்க்கையில் இந்த வினாவுக்கான பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன. பல பரீட்சார்த்திகள் 50 % க்கும் அதிகமான புள்ளிகளை பெற்றனர். எனினும், இந்த வினாவில் பரீட்சார்த்திகள் அதிகமான புள்ளிகளை பெற்றிருக்ககமுடியும்.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:** கணக்கீட்டு நியமங்கள்பற்றிய அறிவும் அவற்றின் பிரயோகமும்.

## வினா இல. 09

பகுதி (a) யில் ஒன்றித்தலினால் ஏற்படும் நன்மதிப்பு, கட்டுப்பாடற்றோர் நாட்டம் ஆகியவற்றின் கணிப்பீடு மற்றும் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றின் தயாரிப்பு பற்றி வினவப்பட்டது.

அனேகமானோர் இந்த வினாவுக்கு விடையெழுத முயற்சித்துள்ளனர். காணப்பட்ட பொதுவான தவறுகள் சில் கீழ்வருமாறு:

- பலர் நன்மதிப்புக் கணிப்பீட்டில் மீள்மதிப்புச் செம்மையாக்கங்களை செய்யவில்லை.
- பலர் நன்மதிப்பினை சரியாகக் கணித்திருக்கவில்லை.
- பலர் மிகையாக அறவிட்ட தேய்மானத்திற்கு செம்மையாக்கம் செய்யவில்லை.
- அனேகமானோர் மீள்மதிப்பு மற்றும் மிகையான தேய்மான அறவீட்டுக்கு தேவையான செம்மையாக்கங்களை மேற்கொள்ளாது, ஒன்றித்த PPE பெறுமதியாக மேன்நிலை மற்றும் உப கம்பனிகளின் PPE பெறுமதிகளை கூட்டியிருந்தனர்.
- தேறாத இலாபம் ஒன்றித்த கைக்கொள் இலாபத்தில் செம்மையாக்கப்படவில்லை.

பகுதி (b) இல் நெம்புவிகிதம், ROCE, மற்றும் தொக்குப் புரள்வு வகிதங்கள் பற்றியும் அவற்றில் அதிகரிப்புக்கு சாத்தியமான காரணங்கள் பற்றியும் வினவப்பட்டது.

அனேகமானோர் நெம்புவிகித அதிகரிப்புக்கான சரியான காரணங்களை இனங்காணவில்லை. பலர் ஏனைய இரு விகிதங்களில் அதிகரிப்புக்கான காரணங்களை சரியாக எழுதியிருந்தனர்.

**மேம்படுத்தவேண்டிய பகுதி:**

நன்மதிப்பு, கட்டுப்பாடற்றோர் நாட்டம், தேறாத இலாபங்களின் கணிப்பீடுகள் மற்றும் கம்பனிகளுக்கு இடையிலான ஊடுசெயல்கள் உட்பட அவற்றின் கையாள்கை பற்றி கவனம் செலுத்த வேண்டும்.

விகிதங்களில் மாற்றங்களுக்கு சாத்தியமான காரணங்களை தெரிந்திருத்தல்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் அறிவு மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்</u>**

1. பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை முழுமையாக வாசித்தறிந்து, ஒவ்வொரு பகுதியிலும் எதிர்பார்க்கப்படும் அறிவுபற்றிய தெளிவான விளக்கத்தை பெறவேண்டும்.

2. வினாக்களை கவனமாக வாசித்து விளங்கிக்கொள்வதுடன், கணிப்பீடுகள் தொடர்புபட்ட சகல செயன்முறைகளையும் தெளிவாகக் காட்டவேண்டும்.

3. எடுகோள்கள் ஏதேனும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடவேண்டும்.

4. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுவதுடன், வினா இலக்கங்களை சரியாக எழுதவேண்டும். விடைத்தாள்களை சமர்ப்பிக்க முன்னதாக அவை சரியாக உள்ளனவா என மீண்டும் சரிபார்க்க வேண்டும்.

5. வினாப்பத்திரத்தில் தரப்படும் அறிவுறுத்தல்களை சரியாக கடைப்பிடிக்கவும்.

6. கடந்தகால வினாக்களையும் விடைகளையும் உற்றுவாசித்தல் அறிவு மற்றும் திறமையை விருத்திசெய்ய உதவும். அவை போன்ற கட்டமைப்பைக் கொண்ட வினாக்கள் மீண்டும் பரீட்சிக்கப்படக்கூடும் ஆதலினால் இந்தமுறை எப்போதும் அனுகூலமானது.

7. கணக்கீட்டு நியமங்களையும் இந்தப் பாடம் தொடர்புபட்ட புத்தகங்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய பிரசுரங்களை வாசித்தல் வேண்டும்.

8. பரீட்சையில் நேர முகாமைத்துவம் முக்கியமானது. ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கிய புள்ளிகளின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்க எடுத்துக்கொள்ள வேண்டிய காலத்தை மதிப்பிடலாம்.

9. உரியமுறையில் தயார்செய்து மிகுந்த நம்பிக்கையுடன் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

- * * * -